உ

சிவமயம்

யாழ்ப்பாணம், திருவண்ணைநகர்

அருள்மிகு வாலாம்பிகா சமேத

# விசுவலிங்க வைத்தீசுவரன் திருக்கோயில்

## (வண்ணை சிவன் கோயில்)



பிரஜாபதி ஆண்டு

( புரட்டாதி - பங்குனி )

ஆலய

## சிறப்பு நிகழ்ச்சி(கள்) நிரல்

*பிரஜாபதி ஆண்டு ஆவணி 27*

**1991 - 09 - 12**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

No.
Date:

உ
சிவமயம்

# வார பட்ச மாத சிறப்பு அபிஷேக / திருவிழா பற்றிய விபரம்

## வெள்ளிக்கிழமைத் திருவிழா (வாரோற்சவம்)

வெள்ளிக்கிழமை தோறும் அருள்மிகு வாலாம்பிகை அம்பாளுக்கு காலை 7-00 மணிக்கு ஸ்நபனாபிஷேகமும், சாயுங்காலத்தில் சந்தனக் காப்பு அலங்காரமும், இரண்டாங் காலப்பூஜையில் லலிதா சகஸ்ர நாமார்ச்சனையும், வசந்த மண்டபத்தில் அருள்மிகு இராஜராஜேஸ்வரி அம்பாளுக்கு சிறப்பு வழிபாடும் தொடர்ந்து உள்வீதி எழுந்தருளலும் நிகழும்.

## பிரதோஷம் (பட்சோற்சவம்)

மாதந்தோறும் வரும் பூர்வபட்ச, அபர பட்ச சதுர்த்தசி திதிகளின் போது வரும் பிரதோஷ காலத்தில் மூலவருக்கு பகல் 3-00 மணிக்கு ஸ்நபனாபிஷேகமும், பிரதோஷ காலப் பூசையின் போது சகஸ்ர நாமார்ச்சனையும், நந்தியெம் பெருமானுக்கு விசேஷ ஆராதனைகளும், தொடர்ந்து அருள்மிகு சந்திரமௌலீசர் ரிஷப வாகனத்தில் எழுந் தருளிக் காட்சி கொடுத்தருளல் ஆகியன நிகழும்.

## சதுர்த்தி (மாதோற்சவம்)

மாதந்தோறும் வரும் பூர்வபட்ச சதுர்த்தியில் அருள்மிகு விநாய கருக்கு காலை 7-00 மணிக்கு அபிஷேகமும் மாலை 5-00 மணிக்கு மூஷிக வாகனத்தில் உள் வீதி எழுந்தருளல்.

## கார்த்திகை (மாதோற்சவம்)

கார்த்திகை நட்சத்திரந்தோறும் காலை 7-00 மணிக்கு அருள்மிகு சுப்பிரமணியசுவாமிக்கு ஸ்நபனாபிஷேகமும் மாலை 7-00 மணிக்கு உள் வீதி எழுந்தருளி அம்பாள் சந்நிதியில் பால் நிவேதனம் நிகழும்

## அருள்மிகு சோமாஸ்கந்தர் அபிஷேகம்

மாதந்தோறும் வரும் அமாவாசைத் தினத்தன்று அருள்மிகு உபய சக்தி ஸ்கந்த சமேத சோமாஸ்கந்தமூர்த்திக்கு முற்பகல் 10-00 மணி தொடக்கம் தெற்கு உள் வீதிக்கு எழுந்தருளச் செய்து விஷேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்த நித்திய நைமித்திய குழு ஏற்பாடு செய்து வருகின்றது.

போக மூர்த்தங்களுள் ஒன்றான அருள்மிகு சோமாஸ்கந்த மூர்த்திக்கு அமாவாசை தோறும் அபிஷேக ஆராதனைகள் செய் வதால் குடும்ப ஒற்றுமை, குடும்பச் சிறப்பு மக்கட் செல்வம் நாட்டு வாழ்வு, செழிப்பு ஆகியன சிறப்புற அமையுமென ஆன்றோர்களின் ஆலோசனைக்கு ஏற்ப நிகழவிருப்பதால் அனைவரும் பங்கு பற்றிப் பயன் பெறுவார்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

No.

Date:

சிவமயம்

# பூஜா காலங்கள்

| | | |
|---|---|---|
| திருவனந்தல் | காலை | 6-00 மணி |
| கால சந்தி | காலை | 8-00 மணி |
| உச்சிக்காலம் | நண்பகல் | 12-00 மணி |
| சாயரட்சை | பிற்பகல் | 4-00 மணி |
| (வெள்ளிக்கிழமை, பிரதோஷம், கார்த்திகை சதுர்த்தி முதலான தினங்களில்) | பிற்பகல் | 3-30 மணி |
| இரண்டாம் காலம் | மாலை | 5-00 மணி |
| (சிறப்பு நாள்களில்) | மாலை | 4-30 மணி |
| வசந்த மண்டபம் (சிறப்பு நாள்களில்) | மாலை | 5-00 மணி |
| அர்த்த யாமம் | மாலை | 6-00 மணி |

குறிப்பு:- *சிறப்பு நாள்களில் பூஜை நேரங்களில் மாற்றம் ஏற்படலாம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வம் செல்வமே.

திருச்சிற்றம்பலம்.

சிவநேயச் செல்வர்களே!

இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணம் நகரமத்தியில் பல இன்னல்களுக்கும், எதிர்ப்புகளுக்கு மிடையில் சைவ மக்களின் நாளாந்த வழிபாட்டுக்காக வணிகர்குல திலகமாக அந்நாளில் விளங்கிய பிரபு வைத்தியலிங்கம் செட்டியார் அவர்களால் தோற்று விக்சுப்பெற்றது திருவண்ணைநகர் அருள்மிகு வாலாம்பிகா சமேத விசுவ லிங்க வைத்தீஸ்வரன் ஆலயமாகும். ஆலயத்தைப் பரிபாலனம் செய் வதற்கு வருவாய் தரக்கூடிய நில, புலங்களையும், அவ்வருவாயைக் கொண்டு கோயில் நித்திய நைமித்திக பூஜைகளையும், திருவிழாக்களையும் எவ்வெவ்வாறு நிகழ்த்தி வரவேண்டும் என்பதற் குரிய திட்டங்களையும் சாசனமூலம் தெரிவித்துள்ளார்கள். செட்டியா ரவர்களின் வழிவந்தோர் சிலர் அவற்றை நிறைவேற்றி வந்தனர். பின்வந்தோர் அவற்றை செயற்படுத்த முடியாத காரணத்தால் வரு வாய்கள் குன்றியும், நித்திய நைமித்திக பூசைகள், விழாக்கள் ஆகியன பொலிவிழந்தும் காணப்பட்டன. இதன் காரணமாக ஆலயத்தையும் ஆலயத்துக்குரிய சொத்துக்களையும் 12-04-91 தொடக்கம் ஆலயபரி பாலன சபை பொறுப்பேற்றது. இச்சபை 12-04-91இல் ஆலயத்தில் கூடியிருந்த சைவப் பெருமக்களால் தெரிவு செய்யப்பட்டதே ஆகும்.

ஆலயத்தைப் பொறுப்பேற்கும்போது ஆலயத்தில், உள் வீதியில் பாரிய பழுதுகள் பல இருந்தன. நித்திய நைமித்திக பூசைகள் திருவிழாக்கள் ஆகியன ஒழுங்காக நிகழவில்லை. நாளாந்தம் 6 காலப் பூசைகள் நடைபெற்றுவரும் ஆலயத்தில் சிவசாரியர் ஒருவரும் உதவி யாளர் ஒருவருமாக இருந்து கடமையாற்றியதிலிருந்து ஆலயசேவை எவ்வாறு இருந்திருக்குமென்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள்.

இந் நிலையில் சபை முதலாவது செயற்குழு கூட்டத்தைக் கூட்டி நிலைமைகளை ஆராய்ந்து அவற்றை செயற்படுத்த தலைவர், செயலாளர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாளரோடு மேலும் மூவர் கொண்ட ஆலோசனை உப குழுக்களைத் தெரிவு செய்தது. அக்குழுக்களின் விபரம்: (1) நித்திய நைமித்திக பூஜைக் குழு, (2) திருப்பணிக் குழு, (3) நிதி வருவாய்க் குழு, (4) திருநந்த வனக் குழு ஆகியனவாம்.

## (1) நித்திய நைமித்திக உபகுழு:

நாளாந்தம் நிகழும் ஆறுகாலப் பூஜைகளை சிவாசாரியர் ஒருவரால் மட்டும் நிகழ்த்த முடியாதென்பதைக் குழு ஆராய்ந்து சிவாசாரியர் களின் எண்ணிக்கையையும் அவர்களுக்குரிய வேதனத்தை அதிகரிப் பதையும் செயற்குழுவுக்கு விதந்துரைத்து ஆலோசனை வழங்கியது. இதனைக் குழு ஏற்றுக்கொண்டு செயற்பட்டது. இதன் பயனாக:

(1) பல அசம்பாவிதங்கள் நிகழ்ந்த ஆலயமும், சூழலும், சாந்தி ஓமம், திசா ஓமம் ஆகிய கிரிகைகள் மூலம் புனிதப்படுத்தப் பட்டன.

(2) பல ஆண்டுகளாக நிகழ்ந்து சில ஆண்டுகளாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த நித்தியோற்சவம் இப்போது முன்னைய வழக்கப்படி, காலை, மாலை ஆகிய இருவேளைகளிலும் நிகழ்ந்துவருகின்றன. வார, பட்ச, மாத விழாக்களும், குருபூசைத் தினங்கள், நடராஜர் அபிஷேகம் ஆகியனவும் அவ்வப்போது நிகழ்த்தத் தவறவில்லை.

(3) சென்ற ஆண்டு நடைபெறாத, ஆடிப்பூர அம்மன் திருவிழா இவ்வாண்டு அவ்வவ்வுபயகாரர்களின் ஒத்துழைப்போடு அடி யார்களின் மனங்குளிர இனிது நடைபெற்றது.

மேலும் இவ்வாண்டு பங்குனிமாதம் முடியும்வரையுள்ள சிறப்பு விழாக்கள் பற்றிய விபரங்களின் நாளே ஒன்று இருப்பதை அடியார்கள தும் உபயகாரர்களதும் கவனத்துக்குக்கொண்டுவருகின்றோம். ஆலயத்தை நிறுவியவரின் சாசனத்தில் குறிப்பிட்ட வெள்ளிக்கிழமைத் திருவிழா, பிரதோஷத் திருவிழா, மாதாந்த கார்த்திகைத் திருவிழா ஆகியவற்றை ஐப்பசி மாதம் தொடக்கம் நிகழ்த்த உபகுழு ஆலோசனை வழங்கியுள்ளது. அத்துடன் புதிதாக அமாவாசை தோறும் அருள்மிகு சோமாஸ்கந்தருக்கு உச்சிக்கால வேளையில் சிறப்பான அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்த வேண்டுமென்ற ஆலோசனையையும் செயற்குழு நடைமுறைப்படுத்தி வருகின்றது.

## (2) திருப்பணி உபகுழு:

ஆலயத்தின் உள்வீதியில் உள்ள கொட்டகைகள் விமானத் தாக்கு தல்கள் மூலம் நிலை குலைந்தன. வாகனங்களும் அவ்வாறே. இவற்றைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பணிக்குழு ஆராய்ந்து பனை மரங்கள், சலாகைகள், ஓடு, கல் ஆகியனவற்றைக் கணக்கெடுத்து, திருப்பணி வேலைகளைச் செவ்வனே செய்து முடித்தது. மடைப்பள்ளி மிகவும் மோசமான நிலையிலிருந்தது. அதனையும் நன்கு அமைத்தது. திருவிழாக்களுக்குத் தேவையான வாகனங்கள் நவராத்திரி விழாவுக்கான சிறிய வாகனங்கள் ஆகியன உடன் திருத்தம் செய்யவேண்டியுள்ளன. இவற்றைச் செய்வதற்கு நிதி, மூலப்பொருட்கள் ஆகியன பற்றுக்குறைவினால் எல்லாவற்றையும் உடன் செயல்படுத்த முடியாவிடினும் காலப்போக்கில் செய்து முடிக்க திருப்பணிக்குழு முயற்சி செய்கின்றது.

## (3) நிதி வருவாய் உபகுழு:

நித்திய நைமித்திக பூசைகள், திருவிழாக்கள் ஆகியன முறையாக நிகழ்வதால் அடியார்கள் கூட்டம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இதனால் உண்டியலால் வரும் வருவாயும் அர்ச்சனையால் வரும் வருவாயும் சிறுகச்சிறுக அதிகரித்து வருகின்றன. இன்றைய சூழ்நிலையில் உபயச் செலவுகள் அதிகரிப்பதால் குழுவின் வேண்டுகோளை ஏற்று உபயகாரர்களும் உபயத் தொகை கூட்டித்தருவதில் பின்னடையவில்லை என்பதை மகிழ்ச்சியோடு அறியத்தருகின்றோம்.

ஆலயத்துக்குரிய ஆதனங்களைப் பற்றிய விபரங்களைச் சேகரிப்பதால் அதிக காலத்தைச் செலவிட வேண்டியுள்ளது. அவ்வாதனங்களிலிருந்து உரிய வாடகை, குத்தகைப் பணத்தைப் பெறுவதிலும் அவற்றுக்குத்தக்க உறுதி எழுதிக் கொடுப்பதிலும் குழு ஈடுபட்டிருப்பதை நாம் பாராட்டாதிருக்க முடியாது. பல பிரச்சனைகளைக் குழு எதிர்நோக்கி உள்ளது. அவற்றை விசாரணை செய்து தீர்ப்பு வழங்க ஆவன செய்வது மிக அவசியமாகும். இவ்விசாரணைகளின் போது மேலதிகமாக பல காணிகள் பலருக்குப் பகிர்ந்தளிக்கும் அளவுக்கு வெளிவர இருப்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது.

## திருநந்தவனம்:

ஆரம்பகாலம் தொடக்கமிருந்துவந்த நந்தவனம் காலக்கிரமத்தில் அழிந்துவிட்டது. அதனைப் புனரமைக்க திருநந்தவனக்குழு பெரு முயற்சி எடுத்து வருகின்றது. திருமாலை தொடுப்பவர் ஒருவரை நிரந்தரமாக நியமித்து ஆலயத்திலுள்ள திருமாலைக் குறட்டிலேயே திருமாலை தொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திருமாலை தொடுப்பதற்குரிய பல்வகை மலர்களை ஆலய நந்தவனத்திலிருந்து பெற வழி செய்வதே முறை. அவ்வேற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. மேலும் திருநந்தவனம் வளர ஆக்க ஊக்கங்களை அடியார்கள் தந்துதவுவார்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிர்வாகம்:**

உப குழுக்களின் ஒத்துழைப்போடும் ஆலோசனைகளோடும் நிர்வாகம் இயங்கி வருகின்றது. முழுநேர முகாமையாளரையும், உதவி முகாமையாளரையும் கொண்ட அலுவலகம் ஆலயத்தில் இயங்கி வருகின்றது. வழிபடுவோர், குடியிருப்பாளர் ஆகியோர் தத்தம் குறைகளை அவ்வப்போது தெரிவித்து நிவர்த்தி செய்ய வாய்ப்புக்கள் உள. மேலும் "அபிப்பிராயக் குறிப்பேடு" ஒன்று அலுவலகத்தில் உள்ளது. குறிப்பேடு மூலம் குறைவு நிறைவுகளைச் சீர் செய்ய வாய்ப்புண்டு.

**பிற:**

சமயம் வளர சமுதாயப்பணி மிக அவசியம். அதனை முழுதாகச் செயல்படுத்த முடியாது விட்டாலும் ஓரளவு செயற்படுத்தி வருகின்றோம். மேலும் பல செய்ய எண்ணுகின்றோம்.

**எமது பணிவான வேண்டுகோள்:**

ஆலயத்தைப் பொறுப்பேற்று குறுகிய காலத்தில் சில பணிகள் புரிந்துள்ளோம். பல முக்கியமான பணிகள் உள. அவற்றை விரைவில் நிறைவு செய்ய வழிபடுவோர், உபயகாரர் முன்வர வேண்டுகின்றோம்.

இன்பமே சூழ்ந்து, எல்லோரும் வாழ
எல்லாம் வல்ல வைத்தீசுவரன் அருள் புரிவானாக;

இப்படிக்கு

வண்ணை வைத்தீசுவரன் திருக்கோயில் ஆலய பரிபாலன சபை
திருவண்ணை நகர்,
யாழ்ப்பாணம்.
18-09-1991

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## பிரஜாபதி ஆண்டு புரட்டாதித் திங்கள், கன்னிரவி, தெட்சணாயனம், வருஷருது, கார்காலம் — 1991

| ஆங். நாள் செப். | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா /சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 17 | 1 | செவ்வாய் | மாதப்பிறப்பு | சங்கராந்தி தீர்த்தம் காலை 6–30 மணி | |
| 20 | 4 | வெள்ளி | வெள்ளிக்கிழமைத் திருவிழா | அருள்மிகு இராஜராஜேஸ்வரி உள் வீதி எழுந்தருளல் மாலை 5–00 மணி | திரு. தங்கராஜா நகைக் கடை, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். |
| 21 | 5 | சனி | சனிப் பிரதோஷம் | அருள்மிகு சந்திரமௌலீசர் ரிஷப வாகனத்தில் உள் வீதி எழுந்தருளல். பி. பகல் 4–00 மணி | திரு. ச. பாலசுப்பிரமணியம் 435, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். |
| 22 | 6 | ஞாயிறு | நடேசரபிஷேகம் | அருள்மிகு நடராஜர் அபிஷேகம் (அர்த்த யாம தெரிசனம்) மு. பகல் 10–00 மணி | திரு. கு கந்தசாமி 103, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். |
| 27 | 11 | வெள்ளி | வெள்ளிக்கிழமைத் திருவிழா | அருள்மிகு இராஜராஜேஸ்வரி உள் வீதி எழுந்தருளல் மாலை 5–00 மணி | |
| 28 | 12 | சனி | கார்த்திகை | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி அபிஷேகம் காலை 7–00 மணி உள் வீதி எழுந்தருளல் மாலை 5–00 மணி | திரு. சோமசுந்தரம் ஐயனார் கோவிலடி, யாழ்ப்பாணம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆங். நாள் அக். | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா/சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 4 | 18 | வெள்ளி | வெள்ளிக்கிழமைத் திருவிழா | அருள்மிகு இராஜராஜேஸ்வரி அம்மன் உள் வீதி எழுந்தருளல் மாலை 5-00 மணி | திரு. இ. சுந்தரலிங்கம் செம்பி தோட்டம், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். |
| 5 | 19 | சனி | சனிப் பிரதோஷம் | அருள்மிகு சந்திர மௌலீசர் ரிஷப வாகனத்தில் உள் வீதி எழுந்தருளல் பி. பகல் 4-30 மணி | திரு வி. சுப்பிரமணியசிவம் 7/2, புகையிரத வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். |
| 7 | 21 | திங்கள் | அமாவாசை | அருள்மிகு சோமாஸ்கந்தர் அபிஷேகம் மு. பகல் 10-00 மணி | |

## நவராத்திரி விழா தொடக்கம்

புரட்டாதி மாதம் 22 - ம் நாள் செவ்வாய்க்கிழமை தொடக்கம் 30 - ம் நாள் திங்கட்கிழமை வரை காலை 7 - 00 மணிக்கு அருள்மிகு வாலாம்பிகைக்கு ஸ்நபனாபிஷேகமும், மாலை சந்தனக்காப்பும், இரண்டாம் கால பூசையில் லலிதா சகஸ்ர நாமார்ச்சனையும் துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி ஆகியோருக்கும் முறையே காலையில் அபிஷேகமும், மாலையில் சந்தனக்காப்போடு அஸ்டோத்தர நாமார்ச்சனையும், கொலுமண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு இராஜராஜேஸ்வரிக்கு வெவ்வேறு அலங்காரத்தோடு சிறப்பு வழிபாடும் லலிதா சகஸ்ரநாமார்ச்சனையும் நிகழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆங். நாள் அக். | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா/சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 8 | 22 | செவ்வாய் | நவராத்திரி 1-ம் நாள் | கேடகக் அம்பாள் – [illegible] காட்சி | திரு. முருகேசு, 30/4, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். |
| 9 | 23 | புதன் | நவராத்திரி 2-ம் நாள் | பூத அம்பாள் – [illegible] வாகனத்தில் காட்சி | திரு. V. S. கணபதிப்பிள்ளை மானிப்பாய். |
| 10 | 24 | வியாழன் | நவராத்திரி 3-ம் நாள் | அன்ன அம்பாள் – [illegible] வாகனத்தில் காட்சி | திரு. பொ. யோகேந்திரா வை. ஜி. மருந்தகம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். |
| 11 | 25 | வெள்ளி | நவராத்திரி 4-ம் நாள் | யானை வாகனத்தில் அம்பாள் – [illegible] காட்சி | திரு. க. கந்தசாமி, நீர்வேலி மேற்கு, நீர்வேலி. |
| 12 | 26 | சனி | சதுர்த்தி நவராத்திரி 5-ம் நாள் | விநாயகர் அபிஷேகம் காலை 7-00 மணி அம்பாள் – ரிஷப வாகனத்தில் காட்சி | திரு. கு. திருவாதிரை, திருப்பதி ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம். |
| 13 | 27 | ஞாயிறு | நவராத்திரி 6-ம் நாள் | மயில்வாகனத்தில் அம்பாள் [illegible] எழுந்தருளிய காட்சி | ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆங். நாள் அக். | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா/சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 14 | 28 | திங்கள் | நவராத்திரி 7-ம் நாள் | சிவபூசை செய்யும் காட்சி<br>அம்பாள் – [redacted] | திரு. ஸ்ரீஸ்கந்தராஜா ஒட்டுமடம், யாழ்ப்பாணம். |
| 15 | 29 | செவ்வாய் | நவராத்திரி 8-ம் நாள் | அம்பாள் – குதிரைவாகனக் காட்சி | திரு. வேலாயுதபிள்ளை, நாமகள் அச்சகம், யாழ்ப்பாணம். |
| 16 | 30 | புதன் | நவராத்திரி 9-ம் நாள் | அம்பாள்-மகிடா சூரசம்மாரக் காட்சி சிங்க வாகனம் | திரு. க. பிரேமநாதன், அபிராமி மரக்காலை, யாழ்ப்பாணம். |
| 17 | 31 | வியாழன் | விஜயதசமி | காலையில் ஆலய பத்ததி வாசித்தல். பிற்பகல் 4-30 மணி அருள்மிகு சந்திர சேகரர் குதிரை வாகனத்தில் எழுந்தருளி, அம்பெய்தல் | திரு. அபிமன்யூ, கொட்டடி, யாழ்ப்பாணம் |

சிவமயம்

## பிரஜாபதி ஆண்டு ஐப்பசித் திங்கள், துலாரவி தெட்சணாயனம், சரத்ருது கூதிர்காலம் - 1991

| ஆங். நாள் அக். | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா/சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 18 | 1 | வெள்ளி | ஐப்பசி மாதப் பிறப்பு<br>நவராத்திரி நிறைவு விழா திருவூஞ்சல் | சங்கராந்தி தீர்த்தம், காலை 6-30 மணி<br>அருள்மிகு இராஜராஜேஸ்வரி திருவூஞ்சல் ஆடி இருப்பிடம் சேர்தல் மாலை 5-00 மணி | வெள்ளிக்கிழமை உபயம் திரு. சுப்பிரமணிய பத்தர், 168, நாவலர் வீதி, யாழ்.<br>திருவூஞ்சல் உபயம் திருமதி S. இராசம்மா 2, வெள்ளாந்தெரு, யாழ். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆங். நாள் அக். | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா/சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 21 | 4 | திங்கள் | பிரதோஷம் | அருள்மிகு சந்திரமௌலீசர் ரிஷப வாகனத்தில் உள் வீதி எழுந்தருளல் மாலை 4-30 மணி | |
| 23 | 6 | புதன் | பூரணை | உச்சிக்காலத்தில் மூலவருக்கு அன்னாபிஷேகம். கற்கட்டு வைரவர் அபிஷேகம். | |
| 25 | 8 | வெள்ளி | (1) கார்த்திகை | அருள்மிகு சுப்பிரமணியர் அபிஷேகம் காலை 7-00 மணி<br>அருள்மிகு சுப்பிரமணியர் உற்சவம் மாலை 5-00 மணி | திருமதி திருநாவுக்கரசு 82/3, அரசடி வீதி, யாழ்ப்பாணம். |
| | | | (2) வெள்ளிக் கிழமை | அருள்மிகு இராஜராஜேஸ்வரி உள்வீதி எழுந்தருளல் மாலை 5-00 மணி | திரு. அ. சி. நடராசா சிவன்கோயில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். |
| நவ. 1 | 15 | வெள்ளி | வெள்ளிக்கிழமைத் திருவிழா | அருள்மிகு இராஜராஜேஸ்வரி உள்வீதி எழுந்தருளல். மாலை 5-00 மணி | திரு. தங்கராஜா கேணியடி, கொக்குவில். |
| 4 | 18 | திங்கள் | பிரதோஷம் | அருள்மிகு சந்திரமௌலீசர் ரிஷப வாகனத்தில் உள்வீதி எழுந்தருளல். மாலை 4-30 மணி | திரு. சண்முகலிங்கம் மாத்தனை, கொக்குவில். |
| 6 | 20 | புதன் | அமாவாசை | அருள்மிகு சோமாஸ்கந்த மூர்த்திக்கு முற்பகல் 10-00 மணிக்கு அபிஷேகம் | |

## கந்தஷஷ்டி திருவிழா

21 - 11 - 91 முதல் 25 - 11 - 91 வரை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிக்கு காலையில் 108 சங்காபிஷேகமும். மாலை 5-00 மணிக்கு சகஸ்ரநாமார்ச்சனையும் தொடர்ந்து திருவிழாவும் நிகழும்.

3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆங். நாள் நவ. | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா/சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 7 | 21 | வியாழன் | கந்தர்ஷஷ்டித் திருவிழா 1-ம் நாள் | காலை: அபிஷேகம்<br>மாலை; திருவிழா | திரு. அரசரத்தினம்<br>'கந்தனருள்' 54. ஸ்ரான்லி வீதி,<br>யாழ்ப்பாணம். |
| 8 | 22 | வெள்ளி | கந்தர்ஷஷ்டித் திருவிழா 2-ம் நாள்<br>வெள்ளிக்கிழமைத் திருவிழா | காலை! அபிஷேகம்<br>மாலை: திருவிழா<br>அருள்மிகு இராஜராஜேஸ்வரி உள் வீதி எழுந்தருளல்<br>மாலை 5-00 மணி | திரு. சி. தியாகராஜா<br>கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>திரு. நடேஸ்வரன்<br>25, சிவன்பண்ணை வீதி,<br>கொட்டடி, யாழ்ப்பாணம். |
| 9 | 23 | சனி | கந்தர் ஷஷ்டித் திருவிழா 3-ம் நாள் | காலை: அபிஷேகம்<br>மாலை: திருவிழா | திரு. கந்தசாமிப் பத்தர் |
| 10 | 24 | ஞாயிறு | 1. கந்தர் ஷஷ்டித் திருவிழா 4-ம் நாள்<br>2. சதுர்த்தி | காலை அபிஷேகம்<br>மாலை: திருவிழா<br>விநாயகர் அபிஷேகம்<br>காலை 7-00 மணி | திரு. சண்முகநாதன்<br>7, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். |
| 11 | 25 | திங்கள் | கந்தர் ஷஷ்டித் திருவிழா 5-ம் நாள் | காலை: அபிஷேகம்<br>மாலை: அருள்மிகு முத்துக்குமார சுவாமிக்கு அம்பிகை வேல் கொடுத்து ஆசி வழங்குதல் | திரு. இரத்தினசிங்கம்<br>கே. கே. எஸ். வீதி.<br>யாழ்ப்பாணம். |
| 12 | 26 | செவ்வாய் | கந்தர் ஷஷ்டித் திருவிழா 6-ம் நாள் | காலை: அபிஷேகம்<br>பிற்பகல் 4-00 மணி சூரசம்மாரம் | திரு. கோபாலசிங்கம்,<br>விநாயகமூர்த்தி<br>பேருந்து நிலையம்,<br>யாழ்ப்பாணம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆங். நாள் நவ. | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா/சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 13 | 27 | புதன் | சிவலிங்க பூஜையும் திருக்கல்யாணமும் | அதிகாலை அருள்மிகு முத்துக்குமார சுவாமிக்கு அபிஷேகம் — சிவலிங்க பூஜை<br>பிற்பகல் திருக்கல்யாணம், முத்துக் குமார சுவாமி திருஊஞ்சல் | லிங்கம் ரெக்ஸ்ரையில்ஸ், நவீன சந்தை, யாழ்ப்பாணம். |
| 15 | 29 | வெள்ளி | வெள்ளிக்கிழமைத் திருவிழா | அருள்மிகு இராஜராஜேஸ்வரி உள் வீதி எந்தருளல் மாலை 5–00 மணி | |

உ
சிவமயம்

## பிரஜாபதி ஆண்டு கார்த்திகைத் திங்கள் விருச்சிகரவி தெட்சணாயனம் சரத்ருது கூதிர்காலம் — 1991

| ஆங். நாள் நவ. | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா/சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 17 | 1 | ஞாயிறு | மாதப் பிறப்பு | சங்கராந்தி தீர்த்தம் காலை 6–30 மணி | |
| 18 | 2 | திங்கள் | கார்த்திகைச் சோமவாரம் 1–ம் வாரம் | அபிஷேகம் பி. பகல் 3–00 மணி சோமவாரத் திருவிழா பிற்பகல் 4–30 மணி அருள்மிகு சந்திர சேகரர் ரிஷப வாகனத்தில் வெளிவீதி எழுந்தருளல் | திரு. சி. செ. சோமசுந்தரம் செட்டியார் 411, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆங் நாள் நவ. | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா/சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 19 | 3 | செவ்வாய் | பிரதோஷம் | அருள்மிகு சந்திர மௌலீசர் ரிஷப வாகனத்தில் உள் வீதி எழுந்தருளல் மாலை 4–30 மணி | |
| 20 | 4 | புதன் | திருக்கார்த்திகை குமாராலயதீபம் | அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி அபிஷேகம் காலை 7–00 மணி அருள்மிகு அருணாசலேஸ்வரர் விஷேச அபிஷேகம் | திரு. சி. முத்துக்குமாரன் 411/1, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். |
| | | | பூரணை சர்வாலயதீபம் | மாலை 5–00 மணி அருள்மிகு முத்துக் குமார சுவாமி மயில்வாகனத்திலும் அருள்மிகு சந்திரசேகரர் ரிஷப வாக னத்திலும் எழுந்தருளி தீபதெரிசனம் | திரு நா. சண்முகம் 108, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். |
| 22 | 6 | வெள்ளி | வெள்ளிக்கிழமைத் திருவிழா | அருள்மிகு இராஜராஜேஸ்வரி உள் வீதி எழுந்தருளல், மாலை 5–00 மணி | திரு. விபுலானந்தன் 117, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| 25 | 9 | திங்கள் | கார்த்திகைச் சோமவாரம் 2–ம் கிழமை | அபிஷேகம் பிற்பகல் 3–00 மணி சோமவாரத் திருவிழா அருள்மிகு சந்திரசேகரர் உள் வீதி எழுந்தருளல் பிற்பகல் 4–30 மணி | திரு. T. பாலசுப்பிரமணியம் 76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். |
| 29 | 13 | வெள்ளி | வெள்ளிக்கிழமைத் திருவிழா | அருள்மிகு இராஜராஜேஸ்வரி உள் வீதி எழுந்தருளல் மாலை 5–00 மணி | |
| டிச. 2 | 16 | திங்கள் | கார்த்திகைச் சோமவாரம் 3–ம் வாரம் | அபிஷேகம் பிற்பகல் 3–00 மணி அருள்மிகு சந்திரசேகரர் உள் வீதி எழுந்தருளல் மாலை 4–30 மணி | திரு. ஓங்காரமூர்த்தி கடையிற்சாமி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம். |
| 3 | 17 | செவ்வாய் | பிரதோஷம் | அருள்மிகு சந்திரமௌலீசர் ரிஷப வாகனத்தில் உள் வீதி எழுந்தருளல் மாலை 4–30 மணி | திரு. சி. சீவரத்தினம் 'பவள இல்லம்', 28, கே. கே. எஸ். வீதி, கொக்குவில். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆங். நாள் டிச. | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா/சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 5 | 19 | வியாழன் | அமாவாசை | அருள்மிகு சோமாஸ்கந்தர் அபிஷேகம் முற்பகல் 10-00 மணி | |
| 6 | 20 | வெள்ளி | வெள்ளிக்கிழமைத் திருவிழா | அருள்மிகு இராஜராஜேஸ்வரி உள் வீதி எழுந்தருளல் மாலை 5-00 மணி | திரு. த. சின்னமணி 9, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். |
| 9 | 23 | திங்கள் | கார்த்திகைச் சோமவாரம் 4-ம் கிழமை (கடைசி) | அபிஷேகம் பிற்பகல் 3-00 மணி அருள்மிகு சந்திரசேகரர் ரிஷப வாகனத்தில் வெளிவீதி எழுந்தருளல் மாலை 4-30 மணி | |

கார்த்திகை 27-ம் நாள் வெள்ளிக்கிழமை முதல் மார்கழி 6-ம் நாள் சனிக்கிழமை வரை அதிகாலை 5-00 மணிக்கு அருள்மிகு மாணிக்கவாசகர் எழுந்தருளி நடராசர் சந்நிதியில் திருவெம்பாவை பாடியபின் சிவபுராணத்துடன் உள் வீதி வலம் வருதல்.

| ஆங். நாள் டிச. | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா/சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 13 | 27 | வெள்ளி | (1) திருவெம்பாவைப் பூஜாரம்பம் 1-ம் நாள் | அருள்மிகு மணிவாசகர் எழுந்தருளல் திருவெம்பாவை அதிகாலை 5-00 மணி | திரு. சு. முத்துச்சாமி நாயுடு சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். |
| | | | (2) வெள்ளிக்கிழமைத் திருவிழா | அருள்மிகு ராஜராஜேஸ்வரி உள் வீதி எழுந்தருளல் மாலை 5-00 மணி | திரு. மகாதேவா கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆங். நாள் டிச. | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா/சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 14 | 28 | சனி | திருவெம்பாவைப் பூஜை 2-ம் நாள் | அருள்மிகு மாணிக்கவாசகர் திருவெம்பாவை பாடியருளல் அதிகாலை 5-00 மணி | திரு. சு. மாரி செட்டியார் மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். |
| 15 | 29 | ஞாயிறு | திருவெம்பாவைப் பூஜை 3-ம் நாள் | அருள்மிகு மாணிக்கவாசகர் திருவெம்பாவை பாடியருளல் அதிகாலை 5-00 மணி | திரு. S. A. குருசாமிச் செட்டியார் 10, வடக்கு வீதி, யாழ்ப்பாணம். |

உ
சிவமயம்

## பிரஜாபதி ஆண்டு மார்கழித் திங்கள் தனுரவி, தெட்சணாயனம் ஹேமருது முன் பனிக்காலம் — 1991

**தனுர்மாத - திருப்பள்ளி எழுச்சி சிறப்பு அபிஷேக ஆராதனை மார்கழி மாதம் முழுதும் அதிகாலை 4-00 மணிக்கு நிகழும்**

| ஆங். நாள் டிச. | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா/சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 16 | 1 | திங்கள் | மாதப்பிறப்பு<br>திருவெம்பாவைத் திருவிழா 4-ம் நாள் | சங்கராந்தி தீர்த்தம்<br>அருள்மிகு மாணிக்கவாசகர் எழுந்தருளி திருவெம்பாவை பாடி அருளல் அதிகாலை 5-00 மணி | ஜப்பான் நகைக்கடை, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆங். நாள் டிச. | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா/சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 17 | 2 | செவ்வாய் | திருவெம்பாவைத் திருவிழா 5-ம் நாள் | அருள்மிகு மாணிக்கவாசசர் எழுந்தருளி திருவெம்பாவை பாடி அருளல் அதிகாலை 5-00 மணி | திரு. இ சிவானந்தன் 101, வடக்கு வீதி, யாழ்ப்பாணம். |
| 18 | 3 | புதன் | திருவெம்பாவைத் திருவிழா 6-ம் நாள் | அருள்மிகு மாணிக்கவாசகர் எழுந்தருளி திருவெம்பாவை பாடி அருளல் அதிகாலை \|5-00 மணி | சாந்தி ஜுவல்லர்ஸ், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். |
| 19 | 4 | வியாழன் | (1) திருவெம்பாவைத் திருவிழா 7-ம் நாள் | அருள்மிகு மாணிக்கவாசசர் எழுந்தருளி திருவெம்பாவை பாடி அருளல் அதிகாலை 5-00 மணி | திரு. A. தங்கவேல் 108, சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். |
| | | | (2) பிரதோஷம் | அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் ரிஷப வாகனத்தில் உள் வீதி எழுந்தருளல் பி.பகல் 4-30 மணி | |
| | | | (3) கார்த்திகை | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி உள் வீதி எழுந்தருளல் மாலை 5-00 மணி | |
| 20 | 5 | வெள்ளி | (1) திருவெம்பாவைத் திருவிழா 8-ம் நாள் | அருள்மிகு மாணிக்கவாசகர் எழுந்தருளி திருவெம்பாவை பாடி அருளல் அதிகாலை 5-00 மணி | திரு. நல்லையா நல்லநாதன் கொட்டடி, யாழ்ப்பாணம். |
| | | | (2) வெள்ளிக்கிழமைத் திருவிழா | அருள்மிகு இராஜராஜேஸ்வரி உள் வீதி எழுந்தருளல் மாலை 5-00 மணி | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆங். நாள் டிச. | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா/சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 21 | 6 | சனி | (1) திருவெம்பாவைத் திருவிழா 9-ம் நாள் | அருள்மிகு மாணிக்கவாசகர் எழுந்தருளித் திருவெம்பாவை பாடி அருளல் அதிகாலை 5-00 மணி | திரு. வேங்கடசாமி அபிராமி அன் கோ, மானிப்பாய். |
| | | | (2) காட்சி கொடுத்தல் | மாலை 5-00 மணிக்கு அருள்மிகு சந்திரசேகரர் திருவூஞ்சலில் எழுந்தருளி திருப்பொன்னூஞ்சல் பாடி, ஆடி அருள்மிகு மாணிக்கவாசக சுவாமிகளுக்குக் காட்சி கொடுத்தருளல். | |
| 22 | 7 | ஞாயிறு | திருவெம்பாவைத் திருவிழா 10-ம் நாள் நிறைவாக - திருவாதிரைத் திருநாள். ஆருத்திரா அபிஷேகம்- தெரிசனம். | அதிகாலை 3-00 மணி தொடக்கம் அருள்மிகு சிவகாம சுந்தரி சமேத நடராஜப் பெருமானுக்கு ஆருத்திரா அபிஷேகம், ஆருத்திரா தெரிசனம் (அதிகாலை-திருவனந்தல்) கோதரிசனம் ஆகியன காலை 7-00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை. வெளி வீதி உலா, திருவூடல், தீர்த்தம் | திருமதி சபாரத்தினம் 50, மார்க்கட் வீதி, காங்கேசந்துறை. |
| 27 | 12 | வெள்ளி | வெள்ளிக்கிழமைத் திருவிழா | அருள்மிகு ராஜராஜேஸ்வரி உள் வீதி எழுந்தருளல் மாலை 5-00 மணி | திரு. ப, ஸ்ரீதரன் 185/9, கில்னர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| 1992 ஜனவரி | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா/சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 2 | 18 | வியாழன் | பிரதோஷம் | அருள்மிகு சந்திரமௌலீசர் ரிஷப வாகனத்தில் உள் வீதி எழுந்தருளல் பி. பகல் 4-30 மணி | திரு. த. பிருதிவிராஜ் 300, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். |
| 3 | 19 | வெள்ளி | வெள்ளிக்கிழமைத் திருவிழா | அருள்மிகு இராஜராஜேஸ்வரி உள் வீதி எழுந்தருளல் மாலை 5-00 மணி | திரு. ப. சிறீதரன் 185/9, கில்னர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். |
| 4 | 20 | சனி | அமாவாசை | அருள்மிகு சோமாஸ்கந்தர் அபிஷேகம் | |
| 8 | 24 | புதன் | சதுர்த்தி | விநாயகர் அபிஷேகம் காலை 7-00 மணி<br>விநாயகர் திருவிழா மாலை 5-00 மணி | |
| 10 | 26 | வெள்ளி | வெள்ளிக்கிழமைத் திருவிழா | அருள்மிகு இராஜராஜேஸ்வரி உள் வீதி எழுந்தருளல் மாலை 5-00 மணி | திரு. பாலசுப்பிரமணியம் கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். |

உ

சிவமயம்

## பிரஜாபதி ஆண்டு தைத் திங்கள் மகரரவி,
## உத்தராயணம் ஹேமந்தருது முன் பனிக்காலம் — 1992

| ஆங். நாள் ஜன. | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா/சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 15 | 1 | புதன் | மாதப்பிறப்பு | சங்கராந்திதீர்த்தம் காலை 6-30 மணி தைப்பொங்கல் அருள்மிகு சூரிய மூர்த்திக்கு அபிஷேக ஆராதனை | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆங். நாள் ஜன. | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா /சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
| --- | --- | --- | --- | --- | --- |
| | | | கார்த்திகை | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி அபிஷேகம் காலை 7-00 மணி<br>அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருவிழா மாலை 5-00 மணி | ஸ்ரீ லங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம். |
| 16 | 2 | வியாழன் | பட்டிப் பொங்கல் | மாலை 5-00 மணிக்கு அருள்மிகு கல்யாண சுந்தரர் எழுந்தருளி பார் வேட்டை | |
| 17 | 3 | வெள்ளி | (1) பிரதோஷம் | அருள்மிகு சந்திரமௌலீசர் ரிஷப வாகனத்தில் உள் வீதி எழுந்தருளல் பிற்பகல் 4-30 மணி | திரு. சச்சிதானந்தம் 435, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். |
| | | | (2) வெள்ளிக் கிழமைத் திருவிழா | அருள்மிகு இராஜராஜேஸ்வரி உள் வீதி எழுந்தருளல் மாலை 5-00 மணி | திரு: சிவலோகநாதன் இராமர் மாளிகை, யாழ்ப்பாணம். |
| 19 | 5 | ஞாயிறு | பூரணை | பிற்பகல் 4-00 மணிக்கு அருள்மிகு ஐயனார், வண்-வடமேற்கு ஐயனார் கோயிலுக்கு எழுந்தருளி காப்புக் கட்டுதல் | |
| 20 | 6 | திங்கள் | தைப்பூசம் (புதிர் எடுத்தல்) | அருள்மிகு தண்டாயுதபாணிக்கு விஷேஷ அபிஷேகம் காலை 7-00 மணி<br>அருள்மிகு சுப்பிரமணியசுவாமி உள் வீதி எழுந்தருளல் மாலை 5-00 மணி | |
| 24 | 10 | வெள்ளி | வெள்ளிக்கிழமைத் திருவிழா | அருள்மிகு இராஜராஜேஸ்வரி உள் வீதி எழுந்தருளல் மாலை 5-00 மணி | திரு. சிவப்பிரகாசம் 111, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். |

No

Date

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆங். நாள் ஜன. | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா/சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 31 | 17 | வெள்ளி | வெள்ளிக்கிழமைத் திருவிழா | அருள்மிகு இராஜராஜேஸ்வரி உள் வீதி எழுந்தருளல் மாலை 5-00 மணி | திருமதி கந்தையா 50/33, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். |
| பெப் 1 | 18 | சனி | சனிப் பிரதோஷம் | அருள்மிகு சந்திரமௌலீசர் ரிஷப வாகனத்தில் உள் வீதி எழுந்தருளல் மாலை 4-30 மணி | மதிவதனி 435, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். |
| 3 | 20 | திங்கள் | மஹோதயம் | மஹோதய தீர்த்தம் காலை 6-30 மணி | |
| | | | அமாவாசை | அருள்மிகு சோமாஸ்கந்தர் அபிஷேகம் மு. ப. 10-00 மணி | |
| 7 | 24 | வெள்ளி | (1) சதுர்த்தி | அருள்மிகு விநாயகர் அபிஷேகம் காலை 7-00 மணி அருள்மிகு விநாயகர் திருவிழா மாலை 5-00 மணி | |
| | | | (2) வெள்ளிக்கிழமைத் திருவிழா | அருள்மிகு இராஜராஜேஸ்வரி உள் வீதி எழுந்தருளல் மாலை 5-00 மணி | திரு. ந கங்கைவேணியன் கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். |
| 11 | 28 | செவ்வாய் | கார்த்திகை | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி அபிஷேகம் காலை 7-00 மணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருவிழா மாலை 5-00 மணி | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## பிரஜாபதி ஆண்டு மாசித் திங்கள் கும்பரவி
## உத்தராயணம் சிசிரருது பின் பனிக்காலம் — 1992

| ஆங் நாள். பெப் | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா /சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 13 | 1 | வியாழன் | மாதப்பிறப்பு | சங்கராந்தி தீர்த்தம் காலை 6–30 மணி | |
| 14 | 2 | வெள்ளி | வெள்ளிக்கிழமைத் திருவிழா | அருள்மிகு இராஜராஜேஸ்வரி உள் வீதி எழுந்தருளல் மாலை 5–00 மணி | |
| 16 | 4 | ஞாயிறு | பிரதோஷம் | அருள்மிகு சந்திரமௌலீசர் ரிஷப வாகனத்தில் உள் வீதி எழுந்தருளல் மாலை 4–30 மணி | திரு. ச. பாலசுப்பிரமணியம் 435, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். |
| 17 | 5 | திங்கள் | நடேசரபிஷேகம் (காலைசந்தி தெரிசனம்) | அருள்மிகு நடராஜருக்கும் முற்பகல் 10–00 மணிக்கு அபிஷேக ஆராதனை | திரு. பொ. சுப்பிரமணியம் பாக்குக் கடை, யாழ்ப்பாணம். |
| 18 | 6 | செவ்வாய் | பூரணை பிடாரி அம்மன் காப்புக் கட்டுதல் (மாசி மகம்) | அருள்மிகு பிடாரி அம்மன் எழுந்தருளி வண் – வடமேற்கிலுள்ள பிடாரி கோயிலுக்க (காளி கோயில் என அழைக்கப்படும்) காப்புக் கட்டி வருதல் பிற்பகல் 4–00 மணி | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆங். நாள் பெப். | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா/சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 21 | 9 | வெள்ளி | வெள்ளிக்கிழமைத் திருவிழா | அருள்மிகு இராஜராஜேஸ்வரி உள் வீதி எழுந்தருளல் மாலை 5-00 மணி | திரு. P. R. மகேந்திரன் 10, யமுனா வீதி, யாழ்ப்பாணம். |
| 25 | 13 | செவ்வாய் | மஹா மாரி திருவிழா | அருள்மிகு மஹா மாரி பெருந் திருவிழாவை முன்னிட்டு வீதி எழுந்தருளல் | |
| 28 | 16 | வெள்ளி | வெள்ளிக்கிழமைத் திருவிழா | அருள்மிகு இராஜராஜேஸ்வரி உள் வீதி எழுந்தருளல் மாலை 5-00 மணி | திரு. ஜெகதீஸ்வரன் 471, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். |
| 29 | 17 | சனி | ஆண்டுப் பெருந் திருவிழா முன்னேற்பாடுகள் | மாலை 5-30 மணி தொடக்கம் விநாயகர் வழிபாடு, அனுக்ஞை, வாஸ்து சாந்தி, முதலான ஆரம்ப கிரிகைகள் | |
| மார்ச் 1 | 18 | ஞாயிறு | கொடியேற்றம் காலை | பஞ்சமூர்த்திகள் எழுந்தருளி கொடியேற்று வைபவம் | திரு. இ. வைத்திலிங்கம் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| | | | பிரதோஷம் பி. ப. 3-30மணி | பிரதோஷ கால பூசை பி. பகல் 3-30 மணி<br>மாலை 5-00 மணி வசந்த மண்டபப் பூசை, நவசந்தி ஆவாகனம் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆங். நாள் மார். | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா/சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 2 | 19 | திங்கள் | பெருந்திருவிழா 2-ம் நாள் காலை 9-00 மணி கேடகம் | அருள்மிகு விநாயகர் திருவிழா தொடக்கம் | ஸ்ரீ தாமோதர விலாஸ் கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். |
| | | | இரவு 5-00மணி மூஷிகம் | அருள்மிகு விநாயகர் திருவிழா | |
| | | | | **மஹா சிவராத்திரி** | **மஹா சிவராத்திரி உபயம்** |
| | | | | 1-ம் யாமம் அபிஷேக ஆராதனை இரவு 8 00 மணி<br>2-ம் யாமம் அபிஷேக ஆராதனை இரவு 10-00 மணி<br>3-ம் யாமம் அபிஷேக ஆராதனை நள்ளிரவு 12-00 மணி<br>அருள்மிகு லிங்கோற்பவற்கு லிங்கோற்பவ கால ஆராதனை | திரு. கே. சுந்தரலிங்கம், சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை,<br>திரு. குமாரசாமிப்பிள்ளை குடும்பம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்.<br>திரு சாம்பசிவம் குடும்பம் 91, கஸ்தூரியார் வீதி, யாழ். |
| | | | | 4-ம் யாமம் லிங்கோற்பவ கால அபிஷேக ஆராதனை 3-00 மணி<br>அதிகாலை 5-00 மணி அர்த்த யாமம் | திரு. க. சிவலிங்கம், சிவலிங்கம் மோட்டர்ஸ், மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம். |
| 3 | 20 | செவ்வாய் | பெருந் திருவிழா 3-ம் நாள் காலை 9-00 மணி கேடகம் | அருள்மிகு விநாயகர் உள் வீதி வலம் | திரு. வ. கார்த்திகேசு நாவலர் வீதி, யாழ்ப்பாணம். |
| | | | அமாவாசை மாலை 5-00 மணி மூஷிகம் | அருள்மிகு விநாயகர் உள் வீதி வலம<br>அருள்மிகு சோமாஸ்கந்தர் அபிஷேகம் மு. ப. 10-00 மணி<br>அருள்மிகு விநாயகர் திருவிழா | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆங். நாள் மார். | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா/சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 4 | 21 | புதன் | பெருந் திருவிழா 4-ம் நாள் காலை 9-00 மணி கேடகம் | அருள்மிகு விநாயகர் திருவிழா மு. பகல் 10-30 மணி அருள்மிகு விநாயகர் யாகப் பூர்ணாகுதி அபிஷேகம் | திரு. வேலாயுதபிள்ளை குடும்பத்தினர் கொட்டடி, யாழ்ப்பாணம். |
| | | | மாலை 5-00 மணி மயில் | அருள்மிகு முத்துக்குமாரசுவாமி திருவிழா ஆரம்பம் | |
| 5 | 22 | வியாழன் | பெருந் திருவிழா 5-ம் நாள் காலை 9-00 மணி கேடகம் | அருள்மிகு முத்துக்குமாரசுவாமி உள் வீதி எழுந்தருளல் | திரு. அ. வை. முருகேசு தீபா ஜுவல்லர்ஸ் யாழ்ப்பாணம். |
| | | | மாலை 5-00 மணி ஆட்டுக் கடா | அருள்மிகு முத்துக்குமாரசுவாமி வீதி எழுந்தருளல் | |
| 6 | 23 | வெள்ளி | பெருந் திருவிழா 6-ம் நாள் காலை 9-00 மணி கேடகம் | அருள்மிகு முத்துக்குமாரசுவாமி உள் வீதி எழுந்தருளல் | திரு. திருமதி யோகானந்தன் பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் |
| | | | மாலை 5-00 மணி ஆட்டுக் கடா | அருள்மிகு முத்துக்குமாரசுவாமி வீதி எழுந்தருளல் | |
| | | | | வெள்ளிக்கிழமை இராஜராஜேஸ்வரி விசேஷ ஆராதனை மாலை 4-30 மணி | திரு. வ. மாணிக்கலிங்கம் 392/1, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆங். நாள் மார். | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா/சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 7 | 24 | சனி | பெருந் திருவிழா 7-ம் நாள் | அருள்மிகு முத்துக்குமாரசுவாமி உள் வீதி எழுந்தருளல் | விவேகானந்தா அச்சகம், யாழ்ப்பாணம். |
| | | | காலை 9-00 மணி கேடகம் | | |
| | | | மாலை 5-00 மணி மயில் | அருள்மிகு முத்துக்குமாரசுவாமி வீதி எழுந்தருளல் | |
| 8 | 25 | ஞாயிறு | பெருந் திருவிழா 8-ம் நாள் | காலை 6-00 மணி அருள்மிகு முத்துக்குமாரசுவாமி யாகம் – பூரணாகுதி – அருள்மிகு சுப்பிரமணியர் அபிஷேகம் | திருமதி மகேஸ்வரி சிவசுப்பிரமணியம் 6/4, கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம். |
| | | | சதுர்த்தி | அருள்மிகு விநாயகர் (சதுர்த்தி) அபிஷேகம் காலை 7-00 மணி | |
| | | | காலை 9-00 மணி கேடகம் | பக்தோற்சவம் உள் வீதி வலம் | |
| | | | மாலை 5-00 மணி கேடகம் | பக்தோற்சவமும் திருமுறை விழாவும் | லட்சுமி நீறேசன் லட்சுமி பவனம், 1/98, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். |
| 9 | 26 | திங்கள் | பெருந் திருவிழா 9-ம் நாள் | | |
| | | | காலை 9-00 மணி கேடகம் | பக்தோற்சவம் உள் வீதி வலம் | |
| | | | மாலை 5-00 மணி கைலாச வாகனம் | அருள்மிகு கல்யாணசுந்தரர் எழுந்தருளிக் காட்சி கொடுத்தல் | திரு. க. கனகராஜா J. P. 'திருஆலவாய்' யாழ்ப்பாணம். (அதிபர் மில்க் வைற், யாழ்ப்பாணம்.) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆங் நாள் மார். | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா/சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 10 | 27 | செவ்வாய் | பெருந்திருவிழா 10–ம் நாள் கார்த்திகை | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கார்த்திகை அபிஷேகம் காலை 7–00 மணி விசேஷ பூஜை மாலை 4–30 மணி பக்தோற்சவம் | |
| | | | காலை 9–00 மணி கேடகம் | முற்பகல் 10–30 மணி நால்வர் யாகம் பூரணாகுதி அபிஷேகம் | திருவிளங்கு நகரத்தார் சங்கம் யாழ்ப்பாணம். |
| | | | | **மஹா யாகாரம்பம்** | |
| | | | மாலை 5–00 மணி பல்லக்கு | அருள்மிகு சந்திரசேகரர், விநாயகர், சுப்பிரமணியர், சண்டேஸ்வரருடன் எழுந்தருளி சந்திரசேகரப் பட்டம் | |
| 11 | 28 | புதன் | பெருந்திருவிழா 11–ம் நாள் காலை 9–00 மணி கேடகம் | பஞ்சமூர்த்திகள் புறப்பாடு | திரு.ச. சிவசக்திவேல் குடும்பம் 19 2/2A, பொன்னப்பாஒழுங்கை. வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். |
| | | | மாலை 5–00 மணி பூதவாகனம் | பஞ்சமூர்த்திகள் புறப்பாடு | |
| 12 | 29 | வியாழன் | பெருந்திருவிழா 12–ம் நாள் காலை 9–00 மணி கேடகம் | பஞ்சமூர்த்திகள் புறப்பாடு | திரு. மு. க. கதிரவேலு மலேயன் கபே, யாழ்ப்பாணம். |
| | | | மாலை 5–00 மணி யானை வாகனம் | பஞ்சமூர்த்திகள் புறப்பாடு | திரு. எம். கே. ஸ்ரீஸ்கந்தராஜா 234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆங். நாள் மார். | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா/சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 13 | 30 | வெள்ளி | பெருந்திருவிழா 13-ம் நாள் காலை 9-00 மணி கேடகம் | பஞ்சமூர்த்திகள் புறப்பாடு | திரு. V. செல்லையா சந்திரா கபே, கே.கே. எஸ்.வீதி, யாழ்ப்பாணம். |
| | | | மாலை 5-00 மணி அன்னவாகனம் | பஞ்சமூர்த்திகள் புறப்பாடு | |
| | | | வெள்ளிக்கிழமைத் திருவிழா | அருள்மிகு இராஜராஜேஸ்வரி விஷேஷ பூஜை ஆராதனை பி. பகல் 4-30 மணி | |

உ
சிவமயம்

## பிரஜாபதி ஆண்டு பங்குனித் திங்கள் மீனரவி, உத்தராயணம் சிசிரருது பின்பனி — 1992

| ஆங். நாள் மார். | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா/சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 14 | 1 | சனி | மாதப்பிறப்பு | காலை 6-00 மணி | திரு. க. வேலும்மயிலும் சந்தியா & கோ, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். |
| | | | பெருந்திருவிழா 14-ம் நாள் காலை 9-00 மணி கேடகம் | பஞ்சமூர்த்திகள் புறப்பாடு | |
| | | | மாலை 5-00 மணி நாகவாகனம் | பஞ்சமூர்த்திகள் புறப்பாடு | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆங். நாள் மார். | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா/சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 15 | 2 | ஞாயிறு | பெருந்திருவிழா 15-ம் நாள் காலை 9-00 மணி கேடகம் | பஞ்சமூர்த்திகள் புறப்பாடு | யாழ். நகை வர்த்தகர்கள் சங்கம் (திரு. இராசமாணிக்கபத்தர் மூலம்) |
| | | | மாலை 5-00 மணி பூந்தண்டிகை | பஞ்சமூர்த்திகள் புறப்பாடு | |
| 16 | 3 | திங்கள் | பெருந்திருவிழா 16-ம் நாள் காலை 9-00 மணி கேடகம் | பஞ்சமூர்த்திகள் புறப்பாடு | திரு. கே. இராஜசிங்கம் 73, 37வது ஒழுங்கை, கொழும்பு - 6. |
| | | | பிரதோஷம் | பிரதோஷ கால விஷேஷ அபிஷேக ஆராதனை பிற்பகல் 3-30 மணி | திரு. ச. பாலசுப்பிரமணியம் 435, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். |
| | | | மாலை 5-00 மணி ரிஷப வாகனத்தில் சகோபுரக் காட்சி | பஞ்சமூர்த்தி புறப்பாடு | |
| 17 | 4 | செவ்வாய் | பெருந்திருவிழா 17-ம் நாள் காலை 9-00 மணி கேடகம் | பஞ்சமூர்த்தி புறப்பாடு | திருவாளர்கள் கு. செல்லையா, கோபாலசாமி குடும்பத்தினர் வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். |
| | | | | பிற்பகல் 4-00 மணி அருள்மிகு பிச்சாண்டவ மூர்த்தி பிச்சை ஏற்க எழுந்தருளல் | |
| | | | மாலை 5-00 மணி குதிரை வாகனம் | பஞ்சமூர்த்தி புறப்பாடு | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆங் நாள் மா ர். | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா /சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 18 | 5 | புதன் | பெருந்திருவிழா 18–ம் நாள் காலை 7–00 மணி வசந்தமண்டப பூஜை தொடர்ந்து திருத்தேர்பவனி | அருள்மிகு உபய சக்தி ஸ்கந்த சமேத சோமாஸ்கந்தர் முதலான பஞ்சமூர்த்திகள் தேருக்கு எழுந்தருளல். | திரு. கே. சி. தங்கராஜா<br>திரு. கே. சி. சண்முகரத்தினம்<br>இரத்தினராஜா |
| | | | பகல் 12–00 மணி | பஞ்சமூர்த்திகள் மண்டகப்படி ஆராதனை | |
| | | | பகல் 1–00 மணி | பிராயச்சித்த மகாபிஷேகம் | |
| | | | மாலை 5–00 மணி கேடகம் | பஞ்சமூர்த்திகள் புறப்பாடு | |
| 19 | 6 | வியாழன் | பெருந்திருவிழா 19–ம் நாள் நடேசரபிஷேகப் காலை 9–00 மணி கேடகம் | அதிகாலை 5–30 மணிக்கு அருள்மிகு நடராஜப் பெருமானுக்குப் பங்குனி உத்தர மகாபிஷேகம் – திருவிழா காலை 7–30 மணி<br>பஞ்சமூர்த்திகள் புறப்பாடாகி சித்தாமிர்த புஷ்கரணியில் தீர்த்தம் பகல் 10-00 மணி<br>மகாயாகம் - பூரணாகுதி – கும்ப அபிஷேகம் பகல் 12–30 மணி | திரு. க. திருநாவுக்கரசு<br>ஸ்ரீரங்கம்<br>கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்<br>திரு. கா. பாலசிங்கம்<br>முத்திரைச்சந்தி, யாழ்ப்பாணம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆங் நாள் மார் | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா/சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 19 | 6 | வியாழன் | பெருந்திருவிழா 19ம் நாள் (தொடர்ச்சி) மாலை5-00மணி | பஞ்சமூர்த்திகள் எழுந்தருளி கொடி இறக்கம்-தொடர்ந்து நவசந்தி விசர்சனம்-வேத. திருமுறை பாராயணம் சூர்ணிகை-தனிவாத்தியம்-மௌனம் சர்வவாத்தியங்கள் முழங்க பஞ்சமூர்த்திகள் இருப்பிடம் சேர்தல். | |
| 20 | 7 | வெள்ளி | பூங்காவனம் காலை 9-00 மணி திருக்கல்யாணம் மாலை 3-00 மணி | அம்பாள் முன் (கட்டிய) மண்டபத்துக்கு எழுந்தருளி தபசு. மாலை மாற்றி வீதிவலம் கன்னி ஊஞ்சல். | திரு. ஞா. வேங்கடசாமி 4, மாவடி வீதி, யாழ்ப்பாணம். |
| | | | வெள்ளிக்கிழமைத் திருவிழா பிற்பகல் 4-00மணி | அருள்மிகு இராஜராஜேஸ்வரி விசேஷ பூஜை ஆராதனை | |
| | | | மாலை5-00மணி | திருக்கல்யாணம் | திரு. நாகேந்திரன் 38, கனாதிட்டி ஒழுங்கை, யாழ் |
| 21 | 8 | சனி | மாலை5-00மணி | அருள்மிகு சண்டேஸ்வரர் உற்சவம் | திரு. வ. மாணிக்கலிங்கம் 392/1, கே. கே. எஸ். வீதி யாழ். |
| 22 | 9 | ஞாயிறு | மாலை6-00மணி | அருள்மிகு பைரவர் அபிஷேக ஆராதனை | திருக்கோயில் |
| 24 | 11 | செவ்வாய் | காலை7-00மணி | பெருந்திருவிழா - பிராயச்சித்த அபிஷேகம் | திருக்கோயில் |
| 27 | 14 | வெள்ளி | வெள்ளிக்கிழமைத் திருவிழா | அருள்மிகு இராஜராஜேஸ்வரி உள் வீதி எழுந்தருளல் மாலை 5-00 மணி | திருமதி பரமேஸ்வரன் இராஜேஸ்வரி 761, கே. கே. எஸ். வீதி, யாழ். |
| 31 | 18 | செவ்வாய் | பிரதோஷம் | அருள்மிகு மௌலீசர் ரிஷபவாகனத்தில் உள்வீதி எழுந்தருளல் பிபகல் 4-30மணி | மதிவதனி 435, கே. கே. எஸ். வீதி, யாழ். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆங். நாள் ஏப். | தமிழ்த் திகதி | கிழமை | தினம் | திருவிழா /சிறப்புப் பூசைகள் பற்றிய விளக்கம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| 2 | 20 | வியாழன் | அமாவாசை | அருள்மிகு சோமாஸ்கந்தர் அபிஷேகம் மு. ப. 10–00 மணி | |
| | 21 | வெள்ளி | வெள்ளிக் கிழமை உற்சவம் | அருள்மிகு இராஜராஜேஸ்வரி உள்வீதி எழுந்தருளல் மாலை 5-00 மணி | திரு. கா. சிவராசா 3-ம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். |
| 6 | 24 | திங்கள் | சதுர்த்தி<br>கார்த்திகை | அருள்மிகு விநாயகர், அருள்மிகு சுப்பிரமணியர் அபிஷேகம் காலை 7–00 மணி திருவிழா மாலை5–00மணி | திரு. இராஜகுலேந்திரன் (குட்டி) திரு. பொ. மகேந்திரன் 492, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். |
| 10 | 28 | வெள்ளி | வெள்ளிக் கிழமைத் திருவிழா | அருள்மிகு இராஜராஜேஸ்வரி உள்வீதி எழுந்தருளல் மாலை 5–00 மணி | திரு. சபாபதி வரதராஜா 159, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். |

உ
சிவமயம்

## ஆங்கீரச ஆண்டு சித்திரைத் திங்கள் மேடரவி
## உத்தராயணம் வசந்தருது இளவேனில் - 1992

| | | | |
|---|---|---|---|
| ஏப்பிரல் 13 | சித்திரை 1 | திங்கட்கிழமை | புத்தாண்டு விஷேஷ அபிஷேக ஆராதனை, சங்கராந்தி தீர்த்தம் பிற்பகல் 1–35 மணி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய பரிபாலனசபை உறுப்பினர்கள்

| | |
|---|---|
| **தலைவர்:** | சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி |
| **செயலாளர்;** | திரு. சி. நடேஸ்வரன் |
| **பொருளாளர்:** | திரு. க. முருகமூர்த்தி |

| | |
|---|---|
| **உப-தலைவர்;** | திரு. ம. சிவராசா |
| **உப-செயலாளர்;** | திரு. க. சிறீஸ்கந்தராசா |
| **உப-பொருளாளர்;** | திரு. க. கிருபாகரன் |

திரு. சு. திருநாவுக்கரசு

கலாநிதி ப. கோபாலக்கிருஷ்ணன்

திரு. த. அருளானந்தம்

திரு. சி. செ. சோமசுந்தரம் செட்டியார்

திரு. மு. சிவராசா

திரு. த. பாலசுப்பிரமணியம்

திரு. க. கனகராசா (சமாதான நீதவான்)

திரு. ச. இந்திரகுமார்

திரு. உ. கந்தசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

No.
Date:

சிவமயம்

# யாழ்ப்பாணம், திருவண்ணைநகர், அருள்மிகு வாலாம்பிகா சமேத விசுவலிங்க வைத்தீசுவரசுவாமி திருக்கோயில் ஆலய பரிபாலன சபையாரின்

## நன்றி

பழமையும் பெருமையும் புதுமையும் வாய்ந்த வண்ணை விசுவலிங்க வைத்தீசுவரன் கோயில் பாழடையும் நிலைக்கு வரும் வேளையில் புத்துயிர் கொடுத்து ஆக்கபூர்வமான ஆலோசனைகள் வழங்கி, முடங்கிக்கிடந்த ஆலய வருவாய்களைத் தக்க முறையில் வெளிக் கொணர்ந்து கோயிலை முன்னிருந்த நிலைக்குக் கொண்டு வருவதற்குரிய செயற்பாடுகளைச் செய்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தாருக்கு நாம் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளோம்.

சமயப் பணிகளோடு கோயில் திருப்பணிகள், சமுதாயப்பணிகள் ஆகியன நிகழ்த்தத் திருவருள் கூட்டியுள்ளது.

திருப்பணிவேலைகளுக்குத் தேவையான பொருட்களை அவ்வப்போது தந்துதவியதோடு கோயில் மரபு, பாரம்பரியம், பூசை முறைகள் ஆகியன நெறி தவறாது நிகழ்த்த ஆணை தந்து அவப்பொழுதையும் தவப்பொழுதாக்க எம்மை நெறிப்படுத்தியவர்களுக்கு நாம் நன்றி கூறத்தானே வேண்டும்!

மேலும் குறுகிய காலத்தில் இந் நிகழ்ச்சிநிரலை மிகத் திறமையாகவும், அழகாகவும் அச்சிட்டுத் தந்த ஸ்ரீ லங்கா அச்சக உரிமையாளர் அவர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவநாயகர்களுக்குரியன

| | மலர் | சமித்து | தானியம் | வாகனம் | அதிதேவ. | ரத்தினம் | இனம் | உலோகம் | நிறம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சூரியன் | செந்தாமரை | வெ. எருக். | கோதுமை | தேர் | சிவன் | மாணிக்கம் | ஆண் | தாமரம் | சிவப்பு |
| சந்திரன் | வெள்ளை அலரி | பலாசு | நெல் | முத்து விமானம் | பார்வதி | முத்து | பெண் | ஈயம் | வெள்ளை |
| ராகு | மந்தாரை | அறுகு | உழுந்து | ஆடு | துர்க்கை | கோமேத. | பெண் | சருங்கல் | கருமை |
| குரு | முல்லை | அரசு | கடலை | யானை | பிரம்மா | புஷ்பராக. | ஆண் | பொன் | மஞ்சள் |
| சுக்கிரன் | வெண்தாம. | அத்தி | மொச்சை | கருடன் | வள்ளியம். | வைரம் | பெண் | வெள்ளி | வெள்ளை |
| சனி | கருங்குவளை | வன்னி | எள் | காகம் | திரிமூர்த்தி | நீலமணி | அலி | இரும்பு | கருமை |
| செவ். | செண்பகம் | கருங்காலி | துவரை | அன்னம் | முருகன் | பவளம் | ஆண் | செம்பு | சிவப்பு |
| புதன் | வெண்காந். | நாயுருவி | பயறு | குதிரை | திருமால் | மரகதம் | அலி | பித்தளை | பச்சை |
| கேது | செவ்வல்லி | தருப்பை | கொள்ளு | சிங்கம் | இந்திரன் | வைடூரியம் | அலி | பருக்கல் | சிவப்பு |

ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம். போன்: 24175

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org